செ.வெ.எண்:78 நாள்:30.11.2018

**கரூர் மாவட்டம்**

**வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் பணிகள் தொடர்பாக கரூர் மாவட்டத்திற்கான வாக்காளர் பட்டியல் பார்வையாளர் திரு.எம்.விஜயகுமார்.இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப. அவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.**

கரூர் மாவட்டத்தில், அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேலாயுதம்பாளையம் பகுதியில், கரூர் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் பார்வையாளரும், எல்காட் நிறுவன மேலாண்மை இயக்குநருமான திரு.எம்.விஜயகுமார்.இஆப.,அவர்கள், கரூர் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப. அவர்களுடன் இன்று (30.11.2018) தல ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத்திருத்தப் பணிகள் சம்பந்தப்பட்ட தேர்தல் அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டத்தில் 134-அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் 95,542 ஆண் வாக்காளர்களும், 1,01,641 பெண் வாக்காளர்களும் மொத்தம் 197183 வாக்காளர்களும், 135-கரூர் சட்டமன்ற தொகுதியில் 108262 ஆண் வாக்காளர்களும், 1,17,811 பெண் வாக்காளர்களும், 2 இதர வாக்காளர்களும் மொத்தம் 2,26,075 வாக்காளர்களும், 136-கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதியில் 98,123 ஆண் வாக்காளர்களும், 1,01,706 பெண் வாக்காளர்களும், 43 இதர வாக்காளர்களும், மொத்தம் 1,99,872 வாக்காளர்களும், 137-குளித்தலை சட்டமன்ற தொகுதியில் 1,03,291 ஆண் வாக்காளர்களும், 1,06,742 பெண் வாக்காளர்களும், 3 இதர வாக்காளர்களும் மொத்தம் 2,10,036 வாக்காளர்களும், 4 சட்டமன்ற தொகுதிகளிலும் சேர்த்து மொத்தம் 4,05,218 ஆண் வாக்காளர்களும், 4,27,900 பெண் வாக்காளர்களும், 48 இதர வாக்காளர்களும் ஆக மொத்தம் 8,33,166 வாக்காளர்களும் உள்ளனர்.

மேலும், 134-அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில், 250 வாக்குச்சாவடி மையங்களும், 159 வாக்குச்சாவடி அமைவிடங்களும், 135-கரூர் சட்டமன்ற தொகுதியில் 261 வாக்குச்சாவடி மையங்களும், 94 வாக்குச்சாவடி அமைவிடங்களும், 136-கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதியில் 253 வாக்குச்சாவடி மையங்களும், 195 வாக்குச்சாவடி அமைவிடங்களும், 137-குளித்தலை சட்டமன்ற தொகுதியில் 267 வாக்குச்சாவடி மையங்களும், 160 வாக்குச்சாவடி அமைவிடங்களும், ஆக மொத்தம் 1031 வாக்குச்சாவடி மையங்களும், 608 வாக்குச்சாவடி அமைவிடங்களும் உள்ளன.

1.9.2018 முதல் 31.10.3018 வரை 134-அரவக்குறிச்சி தொகுதியில் 8,100 மனுக்களும், 135-கரூர் தொகுதியில் 9257 மனுக்களும், 136-கிருஷ்ணராயபுரம் தொகுதியில் 5524 மனுக்களும், 137-குளித்தலை தொகுதியில் 6,509 மனுக்களும் என மொத்தம் 29,390 மனுக்கள் பெறப்பட்டன. இவற்றில் அரவக்குறிச்சி தொகுதியில் 7029 மனுக்களும், கரூர் தொகுதியில் 7638 மனுக்களும், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் 5,191 மனுக்களும், குளித்தலை தொகுதியில் 5616 மனுக்களும் என மொத்தம் 25,474 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மேலும், இறுதி வாக்காளர் பட்டியல் 4.1.2019 அன்று வெளியிடப்படவுள்ளது

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி செல்வசுரபி, வருவாய் கோட்டாட்சியர் திரு.லியாகத், கரூர் நகராட்சி ஆணையர்கள் திரு.செந்தில்முருகன் (கரூர்), திரு.சையதுமுஸ்தபாகமாலுதீன் (குளித்தலை), அனைத்து வட்டாட்சியர்கள், தேர்தல் பிரிவு தனி வட்டாட்சியர் திரு.விஜயகுமார் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**